DEPOSITION OF WITNESS.
(Chapter XXV, B.N.S.S)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ANDIPATTI

Case No. CC.No. 341 / 2022
Deposition of PW6 / LW4

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சேதுபெருமாள் |
| Father's / Husband Name | : | சன்னாசி |
| Village | : | எரதிமக்காள்பட்டி |
| Taluk | : | ஆண்டிபட்டி |
| Calling | : | அரசு பேருந்து நடத்துனர் |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 01.04.2026.

1,3 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் ஆஜர் இல்லை. BNSS பிரிவு 355-ன் கீழ் மனு கொடுத்து அனுமதிக்கப்பட்டது.

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

1. நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து அரசு பேருந்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன்.சுமார் 4 வருடத்திற்கு முன்பு , தேதி மாதம் நினைவில் இல்லை காலை 6.30 மணியளவில் தேனியில் இருந்து வெள்ளிமலை செல்லும் அரசு பேருந்தில் நான் நடத்துனராக பணியில் இருந்த போது மஞ்சனூத்து பாரஸ்ட் செக்போஸ்ட்டில் பேருந்தில் இருந்து இறங்கி நான் கையெழுத்து போட சென்ற போது பாரஸ்ட் ஆபீஸில் இருந்து வெள்ளிமலைக்கு செல்லக்கூடாது என்று பாரஸ்ட் அலுவலர் சொன்னார் அவரது பெயர் நினைவில் இல்லை.

2. அப்போது எனது பேருந்தில் ஓட்டுநரும், நானும் எங்களது டெப்போவின் மேலாளாருக்கு தகவல் கூற பேருந்தில் இருந்து கீழே இறங்கிய போது பேருந்தில் பயணம் செய்தவர்களுக்கும், பாரஸ்ட் அலுவலக்கும் சண்டை நடந்தது. சண்டையை நான் நேரில் பார்க்கவில்லை. யாரை யார் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. இவ்வழக்கின் எதிரிகளையும் எனக்கு தெரியாது.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசுத் தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து நீதிமன்ற அனுமதிக் கோரப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

1. ஆஜர் எதிரிகள் மற்றும் இவ்வழக்கின் எதிரிகள் 25 பேரும் சேர்ந்து வனஅலுவலர் செல்லத்துரையை பணி செய்யவிடாமல் அடித்து காயப்படுத்தினார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை என்றும், அவரது செல்போனையும் எதிரிகள் உடைத்துவிட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கடந்த 27.02.2022 ம் தேதி 6.30 மணிக்கு கோரையூத்தில் இருந்து அரசரடி செல்லும் அரசு பேருந்தில் நான் நடத்துனராக பணியில் இருந்த போது காலை 7.00 மணியளவில் மஞ்சனூத்து செக்போஸ்ட் முன்பு எனது பேருந்தில் வந்த ஆஜர் எதிரிகள் மற்றும் அவருடன் பேருந்தில் இருந்த இவ்வழக்கின் எதிரிகள் வனஅலுவலர் செல்லத்துரை என்பவரை பணி செய்யவிடாமல் தடுத்தும், அவர் வெள்ளிமலைக்கு செல்லக்கூடாது என சொல்லியதால் அவரை எதிரிகள் அடித்து காயப்படுத்தினார்கள் என்றும்,

2. 3 வது எதிரி தவமணி என்பவர் செல்லத்துரை வைத்திருந்த செல்போனை பிடுங்கி உடைத்ததாகவும் மேலும் 2 –6 வரையுள்ள எதிரிகள் செல்லத்துரையை அடித்து காயப்படுத்தியதாகவும், மற்ற எதிரிகளும் செல்லத்துரையை அடித்ததாகவும் மேற்படி சம்பவத்தினை நான் பார்த்ததாகவும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது சம்பவத்தினை நேரடியாக பார்க்கவில்லை என மாற்றி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the open court in the presence of accused read over to the witness and admitted by him to be correct

FAZIL MOHAMED H

Digitally signed by FAZIL MOHAMED H
Date: 2026.04.01 18:53:54 +0530

Judicial Magistrate,
Andipatti.